செ.வெ. எண்: 244 நாள்: 31–03–2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (31.3.2012) சென்னை மாநகர் போக்குவரத்து கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக 389 புதிய பேருந்துகள், புதுப்பிக்கப்பட்ட 75 பேருந்துகள் என மொத்தம் 464 பேருந்துகளை பொது மக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள்.

மாநிலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் போக்குவரத்து சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. அரசு போக்குவரத்துத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் இயங்கி வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகங்கள் நகர், புறநகர், மலைப்பகுதி மற்றும் கிராமப் பகுதிகளில் போக்குவரத்து சேவை அளிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. இது மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் புதுச்சேரிக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இப்போக்குவரத்துக் கழகங்கள் 20,861 பேருந்துகளை இயக்குவதன் மூலம் தேசிய அளவில் மிகப் பெரிய போக்குவரத்து சேவை வழங்கும் நிறுவனங்களாக விளங்குகின்றன. நாளொன்றுக்கு 2.10 கோடி பயணிகள் பயணிக்கின்றனர். சென்னை பெருநகரப் பகுதியில் மட்டும், நாளொன்றுக்கு 55 லட்சத்திற்கும் மேல் பயணிகள் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணிக்கின்றனர்.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் பழுதுபட்ட பேருந்துகளால், பொது மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, இவற்றை சீர்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், புதிய பேருந்துகளை வாங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள்.

இதன் அடிப்படையில், 6 வருடங்கள் அல்லது 7 லட்சம் கிலோ மீட்டருக்கு மேல் இயக்கப்பட்ட பழைய பேருந்துகள் கழிவு செய்யப்படும் நிலையில் உள்ளன. இந்த பழைய பேருந்துகளுக்கு மாற்றாக, 539 கோடியே 83 லட்சம் ரூபாய் செலவில் 3,000 புதிய பேருந்துகளை வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும், மக்களின் குடியேற்றம் காரணமாக, மாநிலத்தின் கிராமம் மற்றும் நகர்ப் பகுதிகள் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன. போக்குவரத்து ஒன்றே, விரிவடையும் பகுதிகளை ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பாலமாக விளங்குகிறது. எனவே, பெருகி வரும் மக்களின் போக்குவரத்து தேவைகளை, புதிய பேருந்துகள் வாங்குவதினால் மட்டுமே பூர்த்தி செய்ய இயலாது என்பதாலும், மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய அதிக அளவு புதிய பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கு நிதிநிலைமை ஏற்புடையதாக இல்லை என்பதாலும், நல்ல நிலையில் உள்ள எஞ்சின் மற்றும் அடிச்சட்டம் ஆகியவற்றை வீணாக்காமல் பயன்படுத்துவது சீரிய நடவடிக்கையாக அமையும் என்பதாலும், வயது முதிர்ந்த மற்றும் பழுதடைந்த பேருந்துகளில் அடிச்சட்டம் மற்றும் எஞ்சின் நல்ல நிலையிலுள்ள பேருந்துகளை கண்டறிந்து, அவைகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்தது.

இதன் அடிப்படையில், முதற்கட்டமாக 1,432 பேருந்துகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றை 97 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் உத்தரவிடப்பட்டு, அதற்கான தொடர் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களுக்கும் புதியதாக 3000 பேருந்துகள் வாங்கப்படும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, முதற்கட்டமாக 389 புதிய பேருந்துகள், கூண்டுகள் மோசமான நிலையிலிருந்து. புதுப்பிக்கப்பட்ட 75 பேருந்துகள் என மொத்தம் 464 பேருந்துகளை சென்னை மாநகர் போக்குவரத்து கழக மத்திய பணிமனையில் இன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள். இவற்றில் 250 புதிய பேருந்துகள், புதிய வழித்தடங்களில் இயக்கப்பட உள்ளன.

மேலும், பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்காக தற்பொழுது புதிதாக வாங்கப்பட்ட பேருந்துகளில், அவசரகால வெளிவழி (Emergency Exit) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது சிறப்பு அம்சமாகும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16 புதிய பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கு பேருந்துகளின் சாவிகளை வழங்கி வாழ்த்தி, ஓட்டுநர்கள் தங்களது பணியினை பாதுகாப்போடு மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறை உயர் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பெருந்திரளான பொது மக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்: 31.03.2012